ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2478/41 - 2026 මාර්තු මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.03.05

*2478/41 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.பி. 5/2025

**2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

1 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வலுசக்தி அமைச்சர் புண்ணிய ஸ்ரீ குமார ஜெயகொடி ஆகிய நான்,

(அ) முதனிலைக் கைமாற்றல் திட்டம் மின்சக்தித் துறை சீர்திருத்தச் செயலகத்தினால் 2026, சனவரி 5 ஆந் திகதி தயாரிக்கப்பட்டுள்ளதென்றும்;

(ஆ) தேசிய காப்புவரிக் கொள்கையுட்பட மின்வலு மீதான தேசிய கொள்கையின் பாகமாகத் தேசிய மின்சாரக் கொள்கை 2026, மாச்சு 03 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்றும்; அத்துடன்

(இ) வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டமும் நீண்டகாலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டமும் நீண்டகால மின்கடத்துகை அபிவிருத்தித் திட்டமும் இலங்கை மின்சார சபையினால் 2026, பெப்புருவரி 18 ஆந் திகதி தயாரிக்கப்பட்டுள்ளதென்றும்,

திருப்தியடைந்து, இதன் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் தவிர, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் திகதியாக 2026.03.09 ஆந் திகதியை இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.

1A - G 46407— 04 (2026/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, மின்சாரச் சட்டத்தின் (1) ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 1 ஆம் பிரிவு, 2 ஆம் பிரிவு, 3 ஆம் பிரிவு, 4 ஆம் பிரிவு, 5 ஆம் பிரிவு, 9 ஆம் பிரிவு, 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி, 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 10 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு, 14 ஆம் பிரிவு, 15 ஆம் பிரிவு, 17 ஆம் பிரிவு, 18 ஆம் பிரிவு, 38 ஆம் பிரிவு மற்றும் 39 ஆம் பிரிவு என்பன 2024, யூன் 27 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**புண்ணிய ஸ்ரீ குமார ஜெயகொடி,**
வலுசக்தி அமைச்சர்.

கொழும்பு,
2026 மார்ச்சு, 05

EOG 03-0055

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.